**களுத்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதியும் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நேரடியாக செலவு வைத்தல் ரூபா 18,040,677 பணப் பெறுவனவாகப் பதியப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சராசரிக் காசுக் கணக்கின் மீதி ரூபா 18,040,677 தொகை குறைவாகவும், நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது அறவிடப்பட்ட ரூபா 481,937 தொகையான ஊழியர் கடன் தவணைப் பணம் 2018 ஆம் ஆண்டின் பணப் பெறுவனவாக கருதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, ஊழியர் கடன் மீதி ரூபா 481,937 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 2,880,960 பெறுமதியாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,460,910 ஆக மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய இயந்திரமும் இயந்திர உபகரணங்களும் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 420,090 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் 2.2.1(ஓ) ஆம் பந்தியை சரி செய்வதற்காக வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 400,000 இனால் வரவு வைத்து திரண்ட நிதியம் ரூபா 400,000 இனால் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 400,000 தொகை குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 400,000 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 264,796 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 129,703 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 135,093 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் சம்பளமற்ற விடுமுறை பெற்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 87,561 தொகை மீளாய்வாண்டில் செலவினங்களின் மீளக் கிடைப்பனவாக சம்பளம் மற்றும் படிகளிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 87,561 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) வஸ்கடுவ நூலகத்திற்காக 2017 ஆம் ஆண்டில் 03 மாதங்களுக்குரியதாக செலுத்த வேண்டிய ரூபா 75,000 வாடகைக்காக நிதிஏற்பாடு வழங்கப்படாமையினால் ஆண்டின் செலவினம் ரூபா 75,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்குரிய ஊழியர் கடன் வட்டி ரூபா 54,857 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 54,857 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 44,395,170 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 44,366,170 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 29,000 குறைவாகவும் வேலைச் செலவினம் ரூபா 29,000 குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்குரிய வேலைக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 19,289,945 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 19,260,945 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்பட்டோர் ரூபா 29,000 குறைவாகவும் வேலை மானியம் ரூபா 29,000 தொகை குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சிய மீதி 45,762 தொகையும் பொதுக் களஞ்சிய செலவினம் ரூபா 27,929 தொகை குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான மாதிரியைத் தயாரித்தல், மற்றும் மதியுரைச் சேவைக்காக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 26,638 இற்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் ஆண்டின் செலவினம் மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) 2017 திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 22,874 தொகையான நிலுவை சம்பளத்திற்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் ஆண்டின் செலவினம் ரூபா 22,874 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டிற்குரிய நூலகப் புத்தகங்களின் நன்கொடைப் பெறுமதி ரூபா 101,565 ஆக இருந்த போதிலும், ரூபா 89,240 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதன உதவி ரூபா 12,325 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டின் இறுதியில் மின்சார களஞ்சிய இருப்பு மீதி ரூபா 15,100 குறைவாகவும், மின்பொருள் செலவினம் ரூபா 15,100 தொகை அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) 2017 ஆம் அண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் பொருட் பதிவேட்டுப் பொருட்களில் கிரயம் மதிப்பிடப்பட்டு நிலையான சொத்து பதிவேடுகளிலிருந்தும் பொருட் பதிவேடுகளில் இருந்தும் அகற்றப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 34,567,343 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 6,196,458 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன முறையே ரூபா 285,883 மற்றும் ரூபா 9,061 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

நிலையான சொத்துப் பதிவேடு, கடன்பட்டோர் பதிவேடு, முற்பணப் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, வைப்புப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்மையால் ரூபா 108,266,562 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக உறுதிப்படுத்தவோ / ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின், | | |
| (i) 149 ஆம் பிரிவு | - | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஹோட்டலொன்று அல்லது சிற்றுண்டிச்சாலை அல்லது தங்குமிடங்களிலிருந்து அந்த நிறுவனங்களின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதம் வரையிலான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதிக் கட்டமாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2,556 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 02 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | 4,266,777 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியின் போதும் காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பாகவும் பட்டியல் தயாரித்து காலாவதியான வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,410,156 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,588,304 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,089,547 | 10,369,403 | 9,509,836 | 4,272,342 | 9,091,147 | 10,234,254 | 11,872,642 | 4,618,480 |
| வாடகை | 240,000 | 229,800 | 270,300 | 12,000 | 150,000 | 156,000 | 373,500 | 52,500 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 602,000 | 3,927,666 | 3,927,666 | - | 2,000,000 | 1,966,395 | 1,966,395 | - |
| ஏனைய வருமானம் | 13,000,000 | 13,000,000 | 39,781,266 | 69,761,925 | 41,000,000 | 41,000,000 | 11,930,452 | 141,041,660 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 145,712,640 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 27,526,869 ஆக இருந்தது. ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கப் பெறுமதி ரூபா 99,193,242 ஆகக் காணப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 74,046,267 ஆகும். 2018 யூலை 31 ஆந் திகதி அளவில் இந்த நிலுவையில் ரூபா 66,118,558 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதன வரி நிலுவை ரூபா 4,548,410 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 3,782,136 தொகை அதாவது 83 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி சிட்டையிடல் ரூபா 9,286,281 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 6,569,574 தொகை அதாவது 71 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 4,267,702 ஆக இருந்ததுடன் அதில் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை ரூபா 975,659 மற்றும் நடப்பாண்டிற்குரிய நிலுவை ரூபா 3,292,043 ஆகக் காணப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதியில் 10 வருடங்களை விட மேற்பட்ட மீதி ரூபா 528,298 ஆக இருந்ததுடன் 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மீதி 638,010 ஆகும்.

#### (ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்

(i) சுற்றுலாச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து ஒரு சதவீதம் வரையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடும் போது 10 ஹோட்டல்களுக்காக 2017 ஆம் ஆண்டில்

பட்டயக் கணக்காளர் ஒருவர் உறுதிப்படுத்திய கணக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சாலிமர் ஹோட்டலுக்காக 2016 ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 75,103 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முச்சக்கர வண்டி வருமானம்

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் முச்சக்கர வண்டி தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட களுத்துறை பிரதேசசபை அதிகாரப்பிரதேசத்தில் முச்சக்கர வண்டி தடுத்து வைத்தல் தொடர்பான உப விதியின் பிரகாரம் ஒவ்வொரு முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அளவை விஞ்சி முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 65,761,925 ஆகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 04 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2017 ஆம் ஆண்டின் போது ரூபா 24,215,081 தொகையான சபையின் 50 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தும் அதில் எந்தவொரு வேலையும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் களுத்துறை நகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 2,143,799 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தக் கிரயத்தை மேவுகை செய்வதற்காக கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

(அ) வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியின் வேலை மேவுகைக்காக முகாமைத்துவ உதவியாளர் தரம் I இன் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியொன்று, அலுவலக பணி உதவியாளர் பதவியொன்று, நான்கு வெளிக்கள தொழிலாளர்கள், சுடலைக்கூட செயற்படுத்துனர் உதவியாளர் மற்றும் 02 முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(இ) இரண்டாம் மட்டத்தில் 03 பதவிகளுக்காக 05 ஊழியர்களும், மூன்றாம் மட்டத்தில் 02 பதவிகளுக்காக 03 ஊழியர்களும் மிகையாகக் காணப்பட்டனர்.

(ஈ) 05 ஊழியர்கள் அமைய மற்றும் சமயோசித பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 3.3 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

**அடியிதழ் புத்தகம் விநியோகித்தல்**

(i) வஸ்கடுவ உப அலுவலகத்திற்காக களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட அடியிதழ் புத்தகங்கள் அந்த அலுவலகத்தின் அடியிதழ் புத்தகப் பதிவேட்டில் பதியப்படாதிருந்ததுடன் புத்தகங்களை விநியோகிக்கும் போதும் தொடரிலக்க ஒழுங்குமுறையில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வஸ்கடுவ உப அலுவலகத்தின் உப பற்றுச்சீட்டுப் புத்தகப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பிரதேசத்தில் பணம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட மற்றும் மீளக் கையளிக்கப்பட்ட உப பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் தொடர்பான விபரம் காணப்படவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை**

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 356,250 பெறுமதியான தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் ரூபா 2,880,960 பெறுமதியான இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு காணப்படவில்லை.

**3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 2007 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து கிடைத்த மின் உற்பத்தி இயந்திரம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 77,500 செலவில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 15 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 591,300 பெறுமதியான 80/100 தார்பரல்கள் 45 அளவில் எந்த வேலைக்கும் பயன்படுத்தப்படாமல் ஆண்டு முழுவதும் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 ஒப்பந்த நிர்வாகம்**

**கங்கந்த சேவை நிலைய நிர்மாணம்**

பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் அடிப்படையில் கங்கந்த சேவை நிலையம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 4,375,538 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) 2016 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 2,944,018 தொகையான வேலை பூர்த்தி செய்யப்பட்டு இறுதிக் கொடுப்பனவாக ரூபா 1,076,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் கட்டிடத்திற்கு மலசலகூட வசதிகளும், வழங்கப்படாமையால் ஒரு வருடம் அளவிலான காலம் முழுவதும் அக்கட்டிடம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(இ) இக்கட்டிடத்தில் பொருத்துவதற்காக வழங்கப்பட்ட ½" பீப் கொக்கிகள், கழுவும் பேசன், 11 பிரதீப்த மின்குமிழ்கள் மற்றும் 04 சீலிங் மின் விசிறிகள் என்பன களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் 15 சதவீதம் முதல் 220 சதவீதம் வரையும், செலவினங்களில் 21.3 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 மாகாண கணக்குகள் செயற்குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாமை

2018 மார்ச் 29 ஆந் திகதி நடைபெற்ற மாகாண கணக்குகள் செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டளைகள் 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 2011 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 2.2.2(இ) பந்தியில் வியாபார அனுமதிப்பத்திர பதிவழித்தல் ரூபா 26,685 தொகை, வியாபார வரி பதிவழித்தல் ரூபா 60,760 தொகை மற்றும் கைத்தொழில் வரி பதிவழித்தல் ரூபா 43,070 தொகை என்பவற்றிற்கு பின்பற்றப்பட்ட முறைமை தொடர்பான பூரணமான பதிவேடுகளுடன் முறையான அறிக்கை சமர்ப்பித்தல்.

(ஆ) 2011 யூலை முதல் 2011 செப்தெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்ட 47 டயர் மற்றும் 09 பற்றறிகள் என்பவற்றை வாகனங்களுக்கு இடும் போது கழற்றி அகற்றப்பட்ட டயர் மற்றும் பற்றறிகளுக்குரிய சரியான அறிக்கை சமர்ப்பித்தல்.

(இ) 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2009 யூன் 29 அந் திகதி முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட கல்உறுகளை தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை பெற்று ஏலமிட்டு அறிக்கையிடல்

(ஈ) 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் எட்டவில சுடலைக்கூடம் முதலாவது சபை அமர்வின் போது திறத்தல் தொடர்பான தீர்மானமொன்றைப் பெற்று அறிக்கை சமர்ப்பித்தல்.

(உ) 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 2.6(உ)(iv) இன் பிரகாரம் 251-2837 வாகனத்தின் வாகன விபத்து தொடர்பாக மீண்டும் பரிசோதனையொன்று நடாத்தி அறிக்கை சமர்ப்பித்தல்

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடல் மற்றும் குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டிருந்தமை. |
| | | (ii) | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள்/ ஆதனங்கள் | (i) | பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை. |
| | | (ii) | பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | (ii) | நிலுவை வரி அறவிடல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை |
| (ஈ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | (i) | பட்டோலைகள் தயாரிக்கப்படாமை |
| | | (ii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் அங்கீகரிக்கப்படாமை. |
| | | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முருண்கள் காணப்பட்டமை. |
| | | (ii) | வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை. |